**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 12.04.2020

Accepted: 15.06.2020

Published: 01.07.2020

Citation:
Manimozhi, T. (2020). Emotional Feelings Expressed in the Statements. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 107–115.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.2401

*Corresponding Author:
dharanivendhan1007@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Emotional Feelings Expressed in the Statements

**Dr. T. Manimozhi**
*Assistant Professor, Department of Tamil*
*Cauvery College for Women (Autonomous), Tiruchirappalli, Tamil Nadu, India*

**Abstract -** Claims are based on the mental feelings of the inner mantras in Sangam literature. Scholars have expressed happiness and regret at the comments. Such is also the case in Kapilar's songs. The nature of the lovers is subtly stated. Kapilar has directly and indirectly expressed the emotion of the lover and the girlfriend. The expressions of the heart are expressed in the songs of the girlfriend and her friend. Kapilar has created feminine pride in his song. This way the girlfriend and her friend are perceived as the best qualities for women in the Sangam society..

**Key Words:** Sangam Literature, Tholkappiyam, Kapilar, Expression of Claims, Mental Sense Lovers, Heart Joining, The Depth of Love, Giving Hope.

**References**

1. Arangasamy, K., Kapillar, Sahitya Akademi, 110 001, 2014.
2. Rajarathinam, K., Sanga Illakiyathil Pothumakkal, Naam Thamizhar Pathippagam, Chennai, 2004.
3. Ramakrishnan, A., Agathinai Manthar oor Aaivu, Sarvothaya Ilakkiya Pannai, Madurai, 1982.
4. Sivaraj, D., Sanga Ilakkiyathil Ulaviyal, Siva Pathippagam, Vellur, 1988.
5. Sundra Shanmuganaar, Manathin Thottram, Puthuvai Painthamizhar Pathippagam, Puthucherry, 1992.
6. Thuran, P., Manamum athan vilakkamum, Santhiya Pathippagam, Ashok Nagar, Chennai, 2008.
7. Thuran, P., Kulanthai Ulaviyalum Manitha Manamum, Santhiya Pathippagam, Chennai, 2008.
8. Varatharajan, M., Kurunthogai Selvam, Paari Nilaiyam, Chennai, 2001.
9. Besant Kirapparraj, Sangathil naam, Kumar Pathippagam, Chennai, 1978.
10. James D Page, PirazhlNialai Ulaviyal, Thamilzhl Veliyettukkazhagam, Tamilnadu Government, Chennai, 1965.

# கூற்றுகளில் வெளிப்படும் மன உணர்வுகள்

*முனைவர் தி. மணிமொழி*
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

***ஆய்வுச்சுருக்கம்:*** *சங்க இலக்கியத்தில் அகமாந்தர்களின் மன உணர்வுகள் கூற்றுகள் அடிப்படையில் அமைந்துள்ளன. அக்கூற்றுகளில் புலவர்கள் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். அந்த வகையில் கபிலரின் பாடல்களிலும் இத்தன்மை காணப்படுகிறது. தலைவியின் இயல்பு மிக நுட்பமாக கூறப்பட்டுள்ளது. தலைவி மற்றும் தோழியின் மன உணர்வினை நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்தியுள்ளார். உள்ளம் ஒன்றுதல், மனமாற்றம், காதல் வெளிப்பாடு, மனமுறிவு, நம்பிக்கை அளித்தல் போன்ற உள வெளிப்பாடுகள் தலைவி மற்றும் தோழி கூற்றுப்பாடல்களில் வெளிப்படுகிறது. உளவியல் அறிஞர்கள் குறிப்பிடும் தன்மை அவர் பாடல்களில் காணப்படுகின்றன. பெண்மையின் பெருமையை தன் பாடலில் கபிலர் படைத்துக் காட்டியுள்ளார். சங்ககாலச் சமூகத்தில் பெண்களுக்கென்று விதிக்கப்பட்ட சிறந்த பண்பு உடையவர்களாக தலைவியும் தோழியும் காட்டப்படுவதை இதன் வழி அறிய முடிகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், தொல்காப்பியம், கபிலர், கூற்றுகளின் வெளிப்பாடு, மன உணர்வுகள், உள்ளம் ஒன்றுதல், அன்பின் ஆழம், நம்பிக்கை அளித்தல்*

மனித இனம் விழுமிய காதல் உணர்வில் தோய வேண்டும் என்று பண்டைத் தமிழர் தம் அறவுணர்வில் பதிந்த கவிதைகள் உள்ளத்தின் வேட்கையாகும். இவ்வேட்கையே கபிலரின் மனவுணர்வில் இடங்கொண்டு, உயர் காதற்கவிதைகளாய் உருவம் பெற்றன. கவிஞர் தாம் எண்ணிய சிந்தனைகளைக் காட்சிகளாக்கி, நேர்முகமாகவும் சில உத்தி முறைகளைக் கையாண்டும் இலக்கண நெறிகளுக்கு உட்பட்டும் பாடல்களைப் படைத்தன. தொல்காப்பியர் களவில் கூற்றுகள் நிகழ்த்துமிடங்களையும் இயல்புகளையும் வரையறுத்தார். அவற்றையெல்லாம் உள்ளடக்கியதாக்கிக் கபிலர் பாக்கள் அமைத்துள்ளார். அவர் பாடல்களில் உள்ளத்தில் எழும் மன உணர்வுகள் பலவிதங்களில் அமைந்து வெளிப்படுவதை அறியலாகிறது. அந்த வகையில் கபிலரின் பாடல்களில் தலைவி, தோழி ஆகியோரின் மன உணர்வினை வெளிப்படுத்தும் சில பாடல்கள் மட்டும் இவண் நோக்கப்படுகின்றன.

## தொல்காப்பியர் வகுத்த கூற்று நெறி

தொல்காப்பியர் காலத்துக் கூற்று நெறியானது அதன் அடுத்தடுத்த காலத்திலும் புலவர்களால் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. அந்த அளவிற்குக் காலத்திற்கும் பொருந்தும் வகையில் தமிழ்ப் பண்பாட்டிற்குரிய உயரிய நிலையில் கூற்றுநிலைகளில் வரையறைகள் விளங்கியிருக்கின்றன.

**இருவகைக் குறிப்பிழைப்பாகிய இடத்தும்**
***(தொல்.பொருள்.1053)***

எனத் தொடங்கும் நூற்பாவில் தலைவி எவ்வெந்நிலையில், எவ்வெப்பொருள் பற்றிக் கூற்று நிகழ்த்துவாள் என கூறப்படுகின்றது. அடுத்து, தலைவிக்குக் காமக்குறிப்பின்கண் கூற்று நிகழும் இயல்பினைக் கூறுவார்.

***காமத்திணையிற் கண்நின்று வரூஉம்***
***(தொல்.பொருள்.1054)***

எனத் தொடங்கும் நூற்பாவில் "தலைவிக்குரிய கிளவி கூறுகின்றாராகலின் முற்பட அவள் தலைவனைக் கண்ணுற்ற வழி வரும் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று" என்பார் இளம்பூரணர்.

இவ்விடத்துத் தலைவியின் இயல்பு மிகநுட்பமாக உணர்த்தப்பட்டுள்ளது. காம ஒழுக்கத்தில் நிலைபெற்று வருகின்ற நாணம், மடம் ஆகிய தலைவியின் உணர்வுகள் குறிப்பினாலும், இடத்தினாலும் புலப்படும். வெளிப்படையாகப் புலப்படாது, கண்களால் வெளிப்படுத்தப் பெறும். தலைவியின் மனஉணர்வுகள் நுட்பமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற நெறி அன்று பின்பற்றப் பெற்றது என்பதைத் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். உணர்வுகள் ஆடவர் போல் பட்டாங்கு வெளியீடு கள் மகளிர்க்கு அமையவில்லை. தனது உணர்வுகளை நுட்பமாய் வெளிப்படுத்தும் பெண்மையின் உளவியல் சுட்டடப் பெறுகின்றது.

***தலைவி கூற்று நிகழும் இடங்களை***
***மறைந்து அவன் காண்டல் தன் காட்டுதல்***
***(தொல். பொருள். - 1057)***

எனத் தொடங்கும் நூற்பாவில் விரிவாக எடுத்துரைப்பார். பெண்மையின் இயல்புக்கேற்பத் தலைவியின் கூற்று நிகழும் இடங்களை எடுத்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர்.

**கூற்றுகளில் வெளிப்பாடுகள் உணர்வு நிலைகள்**

தலைவி தனக்குள் தோன்றும் எண்ணங்களைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பலவாறாக வெளிப்படுத்தியுள்ளார். சில இடங்களில் நேரடியாகத் தனது மகிழ்ச்சியையும், வருத்தத்தையும் வெளிப்படுத்துகிறாள். சிலவேளைகளில் நேரடியாகத் தனது கருத்தைத் தெரியப்படுத்தாமல் தோழியின் மூலமாகக் குறியீடாகவும் மறைமுகமாகவும் வெளிப்படுத்துகிறாள். தலைவியின் உள்ளத்தில் தோன்றும் வெளிப்பாடுகளை ஒன்றுதல், உள்ளக்கிளர்ச்சி, புறத்தோற்றம், கருத்தேற்றம், மணமுறிவு போன்ற நிலைகளில் தலைவியின் பேச்சுகள் அமைகின்றன.

**உள்ளம் ஒன்றுதல்**

உவப்பத் தலைக்கூடி உள்ளத்தால் ஒன்றுதல் பழந்தமிழரின் வாழ்வியல் முறைகளில் ஒன்றாகும். இவ்வாறு ஒன்றுதல் நட்பாக, காதலாக வெளிப்படுகிறது. தலைவன் தலைவி வாழ்விலும் ஒருவருக்கொருவர் உள்ளத்தால் ஒன்றிவிடுதலைப் பல பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

***என் நெஞ்சம் கிளியே***
***ஆர் இருட் கங்குல் அவர்வயின்***
***சாரல் நீர் இடைச் செலவு ஆனாதே***
***(குறுந். 153)***

என்ற பாடலின் தலைவி தலைவனோடு வாழ்ந்து இன்பம் அடைகிறாள். தலைவனின் பண்பு நலன்களை நன்கு உணர்ந்தவள். எனவே, தலைவன் பிரிவை ஏற்க அவள் மனம் உடன்படவில்லை. மேலும், அவன் இல்லாத இடம் துன்பம் தருவதாகக் கருதுகிறாள். தன் துன்பம் நீங்க தலைவன் சென்ற வழியில் தானும் செல்ல வேண்டும் என எண்ணுதல் தலைவி தலைவனை உடலாலும் உள்ளத்தாலும் ஒன்றுதல் எனும் உள வெளிப்பாட்டை காட்டுகிறது. இடையூறுகள்மிகுந்த மலைச்சாரல் வழியாகத் தலைவன் வரும்போதும், மீண்டு செல்லும் போதும், அவனைக் காத்து செல்வதற்காக இவன் நெஞ்சும் உடன் சென்றது என்று பாடலில் பதிவாகிறது.

நீண்ட வழியில் மலைச்சாரலில் புலி, யானை, பாம்பு முதலிய விலங்குகளால்

அச்சம் ஏற்படும் எனத் தெரிந்தும், தலைவன் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாகத் தானும் செல்ல வேண்டும் என எண்ணுவது மனம் ஒன்றிச் செயல்படும் உளப்பாட்டைக் காட்டுகிறது. இப்பாடலில் கபிலர் தலைவியினுடைய அன்பின் ஆழத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். “நிலம் முதலிய புறப்பொருள்களின் தொடர்பால் மக்களது மனத்தகத்தே அன்பெனும் உயிர் பண்பு வளர்ந்து சிறத்தல் அகத்திணை வளர்ச்சியாகும்.”[1]

### உள்ளக்கிளர்ச்சி அடைதல்

மனிதனின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் எண்ணங்களே அடிப்படையாக அமைகின்றன. அந்த எண்ணங்கள் பிறக்கும் இடத்தை “உள்ளம்” என்றும் அழைக்கின்றனர். உள்ளமே நடத்தைக்குக் காரணமாக அமைகிறது. உள்ளத்தில் இயல்பிற்கு மாறான நிலைகளில் ஒரு நிலையே உள்ளக்கிளர்ச்சி ஆகும். நனவு நிலையில் நம்முடைய செயல்களை எல்லாம் பாதித்து நிற்கும் பொதுநிலையே உணர்ச்சி ஆகும். இது ஆழமாய்ப் பதிந்து நம்மை ஆட்டி வைக்கும் தன்மை அடையும் போது உள்ளக் கிளர்ச்சியாய் அமைகிறது.

தலைவன் பிரிந்ததால் அவன் கடந்த வழியில் கொடுமையையும் நெடுந்தொலைவில் உள்ளார் என்பதையும் அறிந்த தலைமகள் துன்ப மிகுதியால் செயலற்ற மனம் படைத்தவளாகத் தவிக்கிறாள். தலைவன் பிரிவைத் தன்னால் தாங்கிக்கொள்ள இயலவில்லை என்கிறாள்.

**தோழி உண்கண்**
**நீரோடு ஓராங்குத் தணப்ப**
**உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே**
**(குறுந்.38)**

என்றபாடலில்“தலைவனின்பிரிவைப்பொறுத்துக் கொள்ளும் வலிமை உடையோருக்குப் பிரிவுப் என்பது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால், எனக்குப்பிரிவு என்பது பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பிரிவுத்துயரைத் தாங்க முடியாததால் தலைவனின் நட்பு எனக்குத் துன்பத்தை அளிக்கின்றது. தலைவனை மனதில் நினைத்து இருப்பதால்தான் நான் உயிர் வாழ்கிறேன். இல்லையேல், நினைக்காத அன்றே இறந்து படுவேன்” என்று தலைவி குறிப்பிடும்போது தலைவியின் மனதில் ஏற்பட்ட உள்ளக்கிளர்ச்சியைக் காட்டுகிறது. அதாவது தலைவனின் பிரிவு தலைவியின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்து எச்செயலும் செய்ய இயலாதவளாய் தவிக்கச் செய்கிறது. இத்தகையச் சூழலில் தவிக்கும் தலைவியின் மனமானது உள்ளக்கிளர்ச்சி நிலையை அடைந்துள்ளது.

### மன மாற்றத்தை ஏற்படுத்துதல்

“ஓரிடம் பற்றி இன்ப துன்ப உணர்வுகள் அவ்விடத்தை ஒட்டி மட்டும் அமையவில்லை. அவ்விடத்தோடு தொடர்புகொள்ளும் மனத்தையும் ஒட்டியே அமைகின்றன”[2] எனபர். தலைவனைப் பிரிந்த தலைவி,

**அன்னாய் வாழி வேண்டு அன்னை! நீ மற்று**
**யான் அவர் மறத்தல் வேண்டுதி ஆயின்**
**கொண்டல் அவரைப்பூவின் அன்ன**
**வெதை தலை மா மழை சூடி**
**தோன்றல் ஆணாது, அவர் மணி நெடுங்குன்றே**
**(ஐங்.209)**

என்ற பாடலில் “அவரைப் பூப்போன்ற நிறமுடைய வெண்மையான முகட்டினையும் கருமையான உடலை உடைய மேகத்தையும் நீலமணி போன்ற நெடிய மலையையும் உடைய தலைவனது மலையைப் பார்க்கும்போது என் தலைவனை மறக்க முடியவில்லை. அவனை மறப்பது என்பது என்னால் முடியாத செயல் எனத் தலைவி தன் இயலாமையைப் புலப்படுத்தி இருக்கிறாள்.

“இன்பத் துன்பங்கள் பொருள்களிலும் சூழ்நிலையிலும் மட்டுமில்லை, நுகர்வோரின்

மனதை ஒட்டி அவை பெரிதும் மாறுகின்றன"[3] எனவே தலைவன் தலைவியை மணப்பது தலைவிக்கு இன்பமாகும். அது நிகழாதபோது ஏற்படும் துன்பத்தைப் போக்க மனதை வேறு சிந்தனையில் செலுத்தி தலைவனை சற்று மறக்கலாம் என்றால் அவர் நாட்டு மலையைப் பார்க்கும்போதெல்லாம் தலைவனின் நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றது என்று தலைவி புலம்பித் தவிக்கிறாள்.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்**
**(திருக்குறள் 341)**

எவ்வற்றிலெல்லாம் விலகி இருக்கிறோமோ அவற்றினால் ஏற்படக்கூடிய துன்பத்திலிருந்தும் விலகி இருக்கலாம் என்பது வள்ளுவர் குறிப்பிடும் செய்தியாகும். ஆனால் காதலின் இலக்கணத்தில் காதலர்கள் ஒருவரை ஒருவர் நினைத்துக்கொண்டு இருத்தலே முதன்மையானதாகும்.

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கம் செப்பல் நாணு வரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**
**சிறப்புடை மரபின் அவை களவு என மொழிப**
**(தொல்.பொருள். 1046)**

என்ற நூற்பா காதலியை நினைத்துக் கொண்டிருத்தலைப் பற்றி குறிப்பிடுகிறது. தோழி தலைவனை மறைக்கும்படி இப்பாடலில் கூறுவதும் குறிப்பிடத்தக் கதாகும். தோழி தலைவனின் நினைவைச் சற்று மறந்து இருக்கும்படி தலைவியிடம் கூறுதல், காதலுக்கு எதிரானது அல்ல. உளவியல் அடிப்படையில் வேறு சிந்தனையானது மனநிலையை மாற்றுவதற்கே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நம்பிக்கை அளித்தல்

பிறருடைய கருத்தினை மறுப்பின்றி ஏற்கும் மனநிலையைக் கருத்தேற்கும் தன்மை என்பர். "நாம் எவரை அதிகமாக மதித்துப் போற்றுகின்றோமோ, அவரது கருத்துக்களைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்கிறோம். ஒருவரிடம் நாம் கொண்டுள்ள பெருமதிப்பு அவரது கருத்துக்களுக்கும் இடமாற்றம் செய்யப்படுகிறது."[4] தலைவியால் தலைவனின் பிரிவை ஆற்றாது வருந்துவதைக் கண்ட தோழி, "தினைப்புனத்தில் உன்னைக் கண்டு பழகி, பின்பு பிரிந்து சென்ற தலைவன் தலைவியின் மேனி அழகும் கெட்டு காணப்பட்டது. நெடுநாள் வராததால் தலைவியின் பேரழகை அழித்தவன் தலைவன். அத்தகைய தலைவன் தலைவியின் விருப்பப்படியே விரைவில் வந்து உன்னை மணந்து, தலைவியின் அழகைத் திரும்ப துளிர்க்கச் செய்வான். வருந்தாதே!" என தலைவியை ஆற்றுபடுத்துகிறாள் தோழி.

**மென் தோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும்**
**பொன்போல் வீறற் கவின் தொலைத்த**
**குன்ற நாடற்கு அயலவர் - நன் மணனே**
**(ஐங். - 230)**

என்ற பாடலில் தலைவி மறுப்புரை கூறாது ஏற்றுக்கொள்ளும்படியாகவும்நம்பிக்கையூட்டும் வகையிலும் கருத்தினை வெளிப்படுகிறாள் தோழி.

### காதலை வெளிப்படுத்துதல்

காதல் என்ற சொல் அன்பைக் குறிக்கும். எந்த உயிரும் அன்பு இல்லாமல் இயங்க முடியாது. தன்னைச் சார்ந்துள்ள அனைவரிடமும் அன்பு செலுத்தி வாழ்வது தான் வாழ்க்கை. மனிதன் மட்டுமல்லாது பறவைகள், விலங்குகளுக்கு இடையிலும் காதல் ஏற்படுகிறது. அன்பை அவைச் செயல்பாடுகள் மூலம் வெளிப்படுத்துகின்றன. ஆனால் மனிதன் மொழியின் மூலம் ஒருவர் மீது ஏற்படும் அன்பு உணர்வை வெளிப்படுத்துகிறான். ஓர் ஆணுக்கு ஒரு பெண் மேல் வரும் அன்பு வருவதும் ஒரு பெண்ணுக்கு ஓர் ஆண் மேல் அன்பு வருவதும் காதலாகும். இருவரின் உள்ளம் ஒத்து விளங்குதல் அன்பின்

அடிப்படையாகும். காதலுக்கான சூழல் தரும் புணர்ச்சி, களிறு தரும் புணர்ச்சி, புனல் தரும் புணர்ச்சி என்ற மூன்று நிலைகளில் வெளிப்படுகிறது.

தலைவனும் தலைவியும் தினைப்புனத்தில் சந்தித்து தனது அன்பை மேலும் ஆழமாக்கிக் கொள்கிறார்கள். பின்பு புணர்தல் நடைபெறுகிறது. தலைவனும் தலைவியும் கூடிய நிலை குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

**அந்நிலை**
**நானும் உட்கும் நண்ணு வழி அடைதர**
**ஒய்யென பிரியவும் விடாஅன் கலைஇ**
**ஆகம் அடைய முயங்கலின்**
***(குறிஞ். 183-186)***

என்ற பாடலில் தலைவன், தலைவியை அணுகிய அளவிலே தனக்கு இயல்பாகிய நாணம், அச்சம் தலைவியிடம் தோன்றினமையால், விரைந்து அவன் இடத்திலிருந்து தலைவி நீங்க முற்பட்டபோதிலும் தலைவன் விடாமல் அவளை கையால் அணைத்து, அவள் மார்பைத் தன் மார்பில் ஒடுங்கும்படி தழுவினான்.

இதில் தலைவி மேல் கொண்டுள்ள காதல் வெளிப்படுகிறது. அவள் மீதுள்ள அளவற்ற அன்பால் அவளைக் கட்டி அணைத்து, தனக்குரியவள் என்ற உரிமை உணர்வோடு, தன் மார்போடு தழுவிக் கொள்கிறான் தலைவன்.

இவ்வாறாகத் தலைவியைத் தழுவும் தலைவனின் செயல்பாடுகள் வெளிப்படுத்தப்படுவதன் வாயிலாகத் தன் காதலின் நிலையை மறைத்தலின்றி வெளிப்படுத்துகிறாள். நாணமுடைய தலைவி, தான் தனிமையில் காதலரோடு உறவாடிய நிலையை வெளிப்படுத்துவதன் நோக்கம், தன் காதலை வெளிப்படுத்துவதும் தோழியின் வாயிலாகக் களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்வினை நோக்கி செய்வதுமே ஆகும். இத்தகைய பொருண்மைகளைக் கொண்டதாக மேற்கண்ட கூற்று கொண்டு விளங்குகிறது.

கலித்தொகையில் இடம்பெறும் தலைவி தன்னுடைய காதலின் அனுபவத்தைத் தோழியிடம் கதைபோல சொல்கிறாள். "ஒருநாள் தலைவி வீட்டிற்கு, "நீர் வேண்டும்" என சொல்லி ஒருவன் வந்தான். அன்னையும் இல்லத்தில் இருந்தபோது, தாகத்தைத் தணிக்கப் பொன்னால் செய்த கரகத்தில் அருந்துவதற்கான நீரை எடுத்துச் சென்று கொடுக்கும்படி அன்னை தலைவியைப் பணித்தாள். நீர் அருந்த வந்த ஆண்மகன் வளையல் அணிந்த தலைவியின் கையைப்பிடித்து பற்றினான். அப்பொழுது தலைவி அஞ்சி, "அம்மா" என்று அழைத்தாள். தாய் அலறிக்கொண்டு ஓடி வரத் தலைவி நடந்ததை மறைத்து, தண்ணீர் பருகிய போது அந்த ஆண்மகன் விக்கினான்" என்றாள். தாய் அதனை நம்பி அவனிடம், "மெல்ல குடிக்கக் கூடாதா?" என்று கோபித்துக்கொண்டு அவன் முதுகைத் தடவிவிட்டாள். தாய் அறியாமல், அந்தக் கள்வன் கடைக்கண்ணால் தலைவியைக் கொன்று விடுபவன் போல் பார்த்துச் சிரித்தான். இத்தகைய குறும்புச் செயல் ஒரு மகிழ்ச்சியை தந்தது. எனத் தலைவி குறிப்பிட்டாள்.

**அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே!**
**உண்ணு நீர் வேட்டேன் என வந்தாருக்கு அன்னை**
**அடர்பொற்சிரகத்தால் வாக்கி சுடரிழாய்**
**உண்ணு நீர் ஊட்டிவா என்றாள் என யானும்**
**தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை**
**வணமுன் கைப்பற்றி நலிய தெருமந்திட்டு**
**அன்னாய் இவன் ஒருவன் செய்தது கண் என்றேனா**
**அன்னை அலறிப் படர்தர தன்னை யான்**
**உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்**
**தன்னை பறம்பு அழித்து நீவ மற்று என்னைக்**
**கடைக்கண்ணால் கொல்வான் மேல்நோக்கி**

*நகைக்கூட்டம்*
*செய்தான் அக்கள்வன் மகன்*
**(குறிஞ்சிக்கலி - 15)**

தலைவியின் இக்கூற்று பெண்களின் அறிவுத்திறனை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. “பெண்புத்தி பின் புத்தி” என்று ஒரு வழக்கு உண்டு. பின்னால் நிகழ இருப்பதை முன்பே அறிந்துகொள்ளும் நுட்பமான அறிவினை உடையவர்கள் பெண்கள் என்பதே அவ்வழக்கு சொல்லக் கூடிய செய்தியாகும். அவ்வாறான திறனுடைய பெண் என்பதை மேற்கண்ட கூற்றில் தலைவியானவள் தெளிவுபடுத்தி இருக்கிறாள். ஓர் ஆடவனுக்கு நீர் கொடுக்க தலைவி வருகிறாள். அவன் தலைவியின் கையைப் பிடித்து விடுகிறான். உடனே, தலைவி சத்தமாக கத்தி விடுகிறாள். சத்தம் கேட்டு தலைவியின் தாய் வந்து கொண்டிருக்கிறாள். தலைவி கத்தும்போது ஆடவனின் செயலுக்காக கத்துகிறாள். தாய் வந்து சேருவதற்குள் அவளின் மனதில் மாற்றம் நிகழ்கிறது. அந்த ஆடவனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என தலைவி எண்ணுகிறாள். காரணம் தலைவிக்கு அவன்பால் அன்பும் பரிவும் ஏற்படுகிறது. அவனை தலைவனாக ஏற்றுக்கொண்டு, தன் அறிவு திறத்தால் தன் தாய் வந்தவுடன் அந்த ஆடவன் தலைவனுக்கு நீர் அருந்தும் போது விக்கல் ஏற்பட்டது என்று நடந்த நிகழ்வை தலைவி மாற்றுகிறாள். எனவே தலைவியின் நுட்பமான அறிவு, தன் காதலின் வெளிப்பாடு ஆகியவை மேற்கொண்ட கூற்றில் வெளிப்படுகின்றன. “தாய்மையே அடுத்தத் தலைமுறையைப் படைக்கும் ஆற்றல் கொண்டது. அதுவே பெண்மையின் வடிவம். ஆதலால், தூய துறவியரும்கூட தாய்மைப் போற்றுவர். கபிலர் காதல் பாடல்களையே அதிகம் பாடியதன் நுட்பம்கூட பெண்மையைப் போற்றும் திறம் காட்டவே என்பதை உணரலாம்.”[5]

### மனமுறிவு வெளிப்படல்

நாம் ஒருவர்மேல் அதிகப்பற்று வைக்கிறோம். அவர்கள் நம் மீது எந்தவித அன்பும் ஆதரவும் காட்டாதபோது நம் மனதில் ஒருவித சலிப்பு, சோர்வு ஆகியவை தோன்றுகிறது. அதுவே மனமுறிவிற்குக் காரணமாகிறது. “வெல்லமுடியாத அல்லது அழிக்க முடியாத வாழ்க்கைச் சூழலிலிருந்து விலக முடியாத போது மனமுறிவு தோன்றும் என வெல்ஸ் கூறுகிறார்.”[6]

### மனச்சோர்விற்கான காரணங்கள்

1. விருப்பத்திற்கும் மதிப்பிற்கும் உரிய ஒருவரையோ, ஒரு பொருளையோ, ஓர் உரிமையையோ இழந்த உணர்வு
2. அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஒருவரிடம் அல்லது ஓரிடத்தில் விருப்பும் வெறுப்பும் ஒருங்கே தோன்றும் போராட்டம்.
3. தன்னிடத்தே குற்றம் காணும் ஆர்வம். ஆகியவை மனச்சோர்விற்கானக் காரணங்களாக அமைகின்றன.[7]

தலைவனைப் பிரிந்து துன்புறும் தலைவி தோழியிடம் செல்வங்களை ஈட்டிக் கொண்டுவரும் பொருட்டு, நம் மென்மையான தோள் மெலியுமாறு நம்மை விட்டு பிரிந்துச் சென்றான் தலைவன். அது குறித்து ஆற்றுவித்த தோழியிடம் தலைவி, தன் மனநிலையை தெளிவுபடுத்துகிறாள்.

*மந்திக் கணவன் கல்லாக் கடுவன் ஒண்கேழ்*
*வயப்புலி குழுமலின், விரைந்து, உடன்*
*குன்று உயர் அடுக்கம் கொள்ளும் நாடன்*
*சென்றனன் வாழி, தோழி! என் மென்தோள்*
*கவினும் பாடயலும் கொண்டே* **(ஐங். - 274)**

என்ற பாடலில் வேற்று வரைவுச் செய்தி கேட்டு அஞ்சி, அவன் மலைக்கு ஓடி விட்டான். இந்நிகழ்வைக் குரங்குப் புலிக்கு பயந்து ஓடியதுபோல என்று தலைவி குறிப்பிடுகிறாள். அத்துடன் “என் நலமும் அழகும் உறக்கமும் போயின” என தலைவியின் மனம் விரக்

திநிலையில் உள்ளதைக் கூறுகிறார். ஒருவேளை தனது தலைவன் தன்மீது அன்பு காட்டவில்லையோ என்றும் அவள் எண்ணுகிறாள்.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவனை நினைத்து வருந்தும் தலைவிக்கு, தோழி கூறிய ஆறுதல் மொழிகள் எதையும் ஏற்கவில்லை. "அவனைப் பிரிந்ததால் என் மகிழ்ச்சி அனைத்தும் சென்றது. உணவு, உறக்கம் அனைத்தையும் மறந்தேன். பொலிவிழந்து காணப்படுகிறேன்" என்று கூறுவதிலிருந்து, தலைவியின் மனமுறிவு என்னும் உளவெளிப்பாடு வெளிப்படுகின்றது. மிகுதியான மனவருத்தத்தை உடையவர்களை "மனசு ஒடிஞ்சு போயிட்டாங்க" என்று பேச்சு வழக்கில் குறிப்பிடுவார்கள். அத்தகைய மனநிலையே இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

தலைவன் திருமணம் செய்துகொள்ள வரவில்லை என்றால், "இறந்துபடுவேன்" என்று கூறுமளவிற்குத் தலைவியின் மனமுறிவு ஏற்பட்டுள்ளது. தலைவன் மேல் தலைவி உயிரையே வைத்துள்ளார் என்பதற்குப் பின்வரும் பாடலைச் சான்றாகக் கூறலாம்.

> ***மீமிசை நல் நாட்டவர் வரின்***
> ***யான் உயிர் வாழ்தல் கூடும் - அன்னாய்***
> ***(ஐங் - 213)***

"தலைவன் திருமணம் செய்து கொள்வேன் என்று உறுதிமொழியோடு வாழ்ந்தால் உயிர் வாழ்வேன். இல்லையேல் இறந்து விடுவேன் என்பது உறுதி" என்கிறாள் தலைவி. தலைவன் அதிகக் காலம் வரைவை நீட்டித்து இருக்கிறான் என்பது இதன்வழி தெரிகிறது. காலம்தாழ்த்த மனமுடைந்து போகிறாள் தலைவி. இனி, திருமணம்தவிர வேறு வழியில்லை. அதுவே தன் மனதிற்கு மகிழ்ச்சியான செய்தியாக நினைக்கிறாள். குரங்கு, புலிக்கு பயந்து ஓடிய மலை நாட்டுத்தலைவன் என்று குறிப்பிட்டிருப்பது, திருமணத்திற்குக் காலம் நீட்டித்திருப்பதை உணர்த்தக் கூடியதாகும். மேலும் தலைவன், தலைவியின் அருகில் இருந்தால் விரைவில் திருமணம் செய்துகொள்ள வலியுறுத்தி இருப்பாள் தோழி. எனவே, காலம் நீட்டித்தல் பொருட்டுத் தலைவன் புலிக்கு அஞ்சிய குரங்கு போலச் சென்றிருப்பான் என்பதைக் கபிலர் உள்ளுறையாகக் கூறியிருக்கலாம். தலைவனின் துணிச்சலற்றதன்மையும் இக்கூற்றில் வெளிப்படுகிறது. இனியேனும் தலைவன் விரைந்து செயல்பட வேண்டும் என்பது தலைவியின் நோக்கமாக அமைகிறது. தலைவன் வரைவினை ஏற்று, இணைந்து வாழாவிடில் உயிர் துறப்பேன் என்ற தலைவியின் கூற்று மனவருத்தத்தின் உச்சமாக வெளிப்படுகிறது. மனம் நலமாக இருந்தால் மட்டுமே உயிர் வாழ்ந்திட இயலும்என்பதைத்தெளிவாகக்காட்டுவதாய் இக்கூற்று அமைவது குறிப்பிடத்தக்கதாகும். தலைவன் பிரிவு தலைவிக்கும் மணமுறிவைத் தருகிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**நிறைவாக**

மக்கள் பேசும் மொழியின் நோக்கம் கருத்துப் பரிமாற்றமேயாகும். அவ்வாறான கருத்துப் பரிமாற்றத்தில் மொழியினை மொழிபவர்களின் பல்வேறு மனவுணர்வுகள் வெளிப்பட்டு நிற்கின்றன. அந்தவகையில் அகவாழ்வில் ஈடுபடும் தலைவன் தலைவி வாழ்க்கையில் அவரவர் கூற்றுகளிலிருந்து அவரவர்மனவுணர்வுகளும்வெளிப்படுவதைச் சங்க இலக்கியப்பாடல்கள் வெளிப்படுத்து கின்றன. கபிலரின் பாடல்களிலிருந்தும் அகமாந்தர்களின் மனவுணர்வுகள் நன்கு வெளிப்படுகின்றன. தலைவி, தோழியின் கூற்றுகளிலிருந்து மனம் ஒன்றிப் போகின்றநிலை அவர்களின் அன்பு மொழியிலிருந்து வெளிப்படுகிறது. மொழிகளால் ஏற்படும் மனப்பாதிப்பால் மனமானது கிளர்ச்சிநிலையினை அடைகிறது. சிந்தனைகள் வேறுவேறு நிலைக்கு

மாறும்பொழுது மனமாற்றத்திற்கான வெளிப்பாடுகள் அமைகின்றன. ஆறுதலான, எதிர்ப்பார்த்த கூற்றுகள் அமையும்பொழுது மனதில் நம்பிக்கை உணர்வுகள் பிறக்கின்றன. மனமானது ஏற்காத கருத்தினை வெளிப்படுத்தும் கூற்றுகளால் மனமுறிவு உணர்வுகள் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு மொழிதலும் ஒவ்வொரு மன உணர்வுகளை வெளிப்படுத்தி அமைகின்றன.

## சான்றெண் விளக்கம்

1. கு. இராசரெத்தினம், சங்க இலக்கியத் தில் பொதுமக்கள், பக்.18,19
2. து. சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.4
3. மு. வரதராசன், குறுந்தொகைச் செல்வம், ப.98
4. பெசன்ட் கிரப்பர்ராஜ், சமூகத்தில் நாம், ப.212
5. கா. அரங்கசாமி, கபிலர், ப.47
6. ஆ. இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.135
7. ஜேம்ஸ் டி பேஜ், பிறழ்நிலை உளவியல், ப.42

## துணைநூற் பட்டியல்


1. அரங்கசாமி, கா., கபிலர், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 2014.
2. இராசரெத்தினம், கு., சங்க இலக்கியத்தில் பொதுமக்கள், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2004.
3. இராமகிருஷ்ணன் ஆ., அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1982.
4. சிவராஜ் து., சங்க இலக்கியத்தில் உளவியல், சிவா பதிப்பகம், வேலூர், 1988.
5. சுந்தர சண்முகனார், மனதின் தோற்றம், புதுவை பைந்தமிழர் பதிப்பகம், புதுச்சேரி, 1992.
6. தூரன் பெ. மனமும் அதன் விளக்கமும், சந்தியா பதிப்பகம் அசோக் நகர், சென்னை - 600 083, முதற்பதிப்பு - 2008.
7. தூரன் பெ. குழந்தை உளவியலும் மனித மனமும், சந்தியா பதிப்பகம், 2008.
8. வரதராசன், மு., குறுந்தொகைச் செல்வம், பாரி நிலையம், சென்னை, மறுபதிப்பு - 2001.
9. பெசன்ட் கிரப்பர்ராஜ், சமூகத்தில் நாம், குமார் பதிப்பகம், வெங்கடராமையர் தெரு, சென்னை, 1978.
10. ஜேம்ஸ் டி பேஜ், பிறழ்நிலை உளவியல், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், சென்னை, 1965.